J/Kokuvil West C.C.T.M.S

முயற்சி திருவினை ஆக்கும்

# யா/கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலை



## பரிசுத் தினம் - 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

01. விருந்தினரை வரவேற்று அழைத்து வரல்
02. கொடியேற்றல் வைபவம்
03. மங்கல விளக்கேற்றல்
04. இறை வணக்கம்
05. வரவேற்பு நடனம்
06. வரவேற்புரையும் அதிபரின் பரிசுத் தின அறிக்கையும்
07. கலை நிகழ்வு
08. பரிசில் வழங்கல் – அமர்வு – 1
09. சிறப்பு விருந்தினர் உரை
10. கலை நிகழ்வு
11. பரிசில் வழங்கல் அமர்வு – 2, 3
12. கலை நிகழ்வு
13. பரிசில் வழங்கல் – அமர்வு – 4
14. கலை நிகழ்வுகள்
15. பிரதம விருந்தினர் உரை
16. கலை நிகழ்வுகள்
17. பரிசில் வழங்கல்
18. தரம் 5 மாணவர் கௌரவிப்பு
19. நன்றியுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலை

## மகுட வாசகம்

முயற்சி திருவினையாக்கும்

## பாடசாலை நோக்கு

சித்திரங்கள் சிறகடித்து சிந்தனை அரும்புகளை கிளைகளாக கொண்ட விருட்சமாக உருவாக்குதல்.

## தூர நோக்கு

அறிவு, திறன், மனப்பாங்கு ஊடாக சவால்களை எதிர்கொள்ளும் ஆளுமைத் திறனுடைய சமூக பிரஜைகளை விருத்தி செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J/Kokuvil
West
C.C.T.M.S
முயற்சி
திருவினை ஆக்கும்

# யா/கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலை

## பரிசுத்தினம்

## 2016.10.26

**தலைவர்**

**திரு.கு.அகிலன்**

*(பாடசாலை அதிபர்)*

**பிரதம விருந்தினர்**

**திரு.தம்பிராசா சிவகுமார்**

*(உதவிக்கல்விப் பணிப்பாளர்,*

*முறைசாரா கல்விப் பிரிவு, யாழ் கல்வி வலயம்)*

**சிறப்பு விருந்தினர்**

**திரு.சுப்பிரமணியம் வேலாயுதபிள்ளை**

*(பழைய மாணவர்,*

*ஓய்வு பெற்ற பதவிநிலை உத்தியோகத்தர்*

*கமநல சேவை திணைக்களம்)*

**தங்களை அன்புடன் வரவேற்கின்றோம்.**

*பாடசாலைச் சமூகம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை

கொக்குவில் மேற்கு குளப்பிட்டி வீதியில் எமது பாடசாலைக்கருகில் இருந்து அருள்பாலித்து எமது பாடசாலையின் அனைத்து செயற்பாடுகளையும் வழிநடாத்திக் கொண்டிருக்கும் திருவருள்மிகு சூடு உகந்த விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து விநாயகரின் ஆசி பெற்று ஸ்ரீ சித்தி விநாயகரின் (ஐயனார்) அருளையும் பெற்று கொக்குவில் மேற்குப் பகுதியில் சிறந்த ஆரம்பப் பாடசாலையாக அடையாளப்படுத்திக் கொண்டிருக்கும் கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலையின் பரிசில் தினம் 2018 ஐ கொண்டாடுவதில் பெருமகிழ்வடைகிறேன்.

இன்றைய இப்பரிசுத்தின விழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் யாழ்ப்பாண கல்வி வலயத்தின் முறைசாரா கல்வி பிரிவின் உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.த.சிவகுமார் அவர்களே!

சிறப்பு விருந்தினர் அவர்களே!

இங்கு குழுமி இருக்கும் அறிவுடை சான்றோர்களே!

வலயக்கல்வித் திணைக்கள அதிகாரிகளே!

வலயக்கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களே!

இப்பாடசாலையின் முன்னாள் ஆசிரியர்களே!

எனது பெருமதிப்புக்குரிய இப்பாடசாலை ஆசிரியர்களே!

எனது அன்புக்குரிய மாணவச் செல்வங்களே!

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரே!

பாடசாலை அபிவிருத்திக் குழுவினரே!

பழைய மாணவர் சங்கத்தினரே!

பேரன்புமிக்க பெற்றோர்களே!

நலன் விரும்பிகளே!

சகோதர பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே!

கொக்குவில் மேற்கு சனசமூக நிலையத்தினரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அனைவருக்கும் எனது இனிய காலை வணக்கங்கள். இந்நேரத்தில் உங்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்று எனது இவ்வருட பரிசுத்தின அறிக்கையை முன்வைப்பதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

பேரன்புக்கும் பெருமதிப்பிற்கும் உரிய பிரதம விருந்தினர் அவர்களே! எமது பாடசாலைச் சமூகத்தின் அழைப்பினை ஏற்று பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இவ்விழாவினை சிறப்பித்துக் கொண்டிருக்கும் யாழ்ப்பாண கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் பெருமதிப்பிற்குரிய திரு.தம்பிராசா சிவகுமார் அவர்களே! நீங்கள் யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், யா/மட்டுவில் மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் உங்கள் பாடசாலைக் கல்வியை கற்றுள்ளீர்கள்.

நீங்கள் பெற்ற உயர்தரப் பெறுபேற்றின் பயனாக மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆசிரிய பயிற்சியை பெற்றீர்கள். இப்படி பயிற்சி பெற்ற நீங்கள் யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலையில் ஆசிரியராக பணி புரிந்தீர்கள். தற்போதைய அறிவியல் உலகத்தின் தேவை உணர்ந்து நீங்கள் தொடர்ந்து கற்றுள்ளீர்கள். இவ்வாறு கற்ற நீங்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரியானீர்கள். தொடர்ந்து பட்டப்பின் டிப்ளோமா, முதுகல்விமாணி போன்ற உயரிய பட்டங்களைப் பெற்றதோடு மட்டும் நின்றுவிடாது கல்விப்புலத்தின் தேவை எது என நீண்டகால நோக்கில் உணர்ந்து விசேட கல்வி டிப்ளோமா, சிங்கள மொழியில் டிப்ளோமா போன்றவற்றை தேசிய கல்வி நிறுவனத்தில் பெற்றுள்ளீர்கள்.

இவற்றினால் நீங்கள் பெற்ற தகுதியை உணர்ந்து யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி உங்களை விரிவுரையாளராக தேர்ந்தெடுத்தது. நீங்கள் ஆசிரிய மாணவர்களை சிறப்பாக பயிற்றுவித்து வழிகாட்டியுள்ளீர்கள்.

அத்துடன் உத்தரவாத கல்வி நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளராகவும், திறந்த பாடசாலைப் பிரிவின் சிரேஷ்ட போதனாசிரியராகவும் பணியாற்றியுள்ளீர்கள். சிறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வயதிலேயே உயரிய சேவைகளை ஆற்றிய நீங்கள் பல்வேறு நூல்களின் சொந்தக்காரராகவும் உள்ளீர்கள். விசேட கல்வி அறிமுகமும் பிரயோகமும், உயிரூட்டும் கடதாசி, ஆரம்பக் கல்வி மாணவர்களிற்கான அடிப்படைத் தேர்ச்சிகள், விசேட கல்வியும் உட்படுத்தல் கல்வியும், முதற்படி போன்ற நூல்களின் உரிமையாளர் நீங்கள். உங்களது இந்த நூல்கள் கல்விப்புலத்தை செழுமைப்படுத்த பெரிதும் உதவுகின்றன.

அதுமட்டுமன்றி தேசிய கல்வி நிறுவகம், மத்திய கல்வி அமைச்சு, யாழ்ப்பாண பல்கலைக்கழக புறநிலைப் படிப்பு பிரிவு, மாகாணக் கல்வித் திணைக்களம் போன்ற இன்னும் பல கல்விசார், கல்விசாரா நிறுவனங்களின் வளவாளராகவும் திகழ்கின்றீர்கள். அது மட்டுமன்றி பல்வேறுபட்ட தேசிய விருதுளையும் பெற்ற நீங்கள் யாழ்ப்பாண கல்வி வலயத்தின் முறைசாரக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளராக இருந்து பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தியில் சிறந்த வேலைத்திட்டங்களை அமுல்படுத்தி, நடைமுறைப்படுத்தி வருகின்றீர்கள். இப்படிப்பட்ட உங்களை இவ்விழாவின் பிரதம விருந்தினராக அழைத்து பெருமைப்படுத்தியதையிட்டு நாம் பெருமையடைகின்றோம்.

அத்துடன் ஒரு கடதாசித் துண்டை வைத்து உங்களின் திருக்கரங்களால் நீங்கள் செய்யும் திருவிளையாடல்கள் வியப்பூட்ட வைப்பன. இந்தத் திறமையான நுட்பங்கள் எங்களிற்கும் எமது பாடசாலைச் சமூகத்திற்கும் உங்கள் தரிசிப்பின் போது பயிற்சியாக வழங்கப்பட வேண்டும் என்பதனை வினயமாக வேண்டி தங்களது திருக்கரங்களால் எமது மாணவச் செல்வங்கள் பரிசில் பெறுவதையிட்டும் மகிழ்வடைகின்றோம். அத்துடன் நீங்கள் மேலும் பல பட்டங்கள், பதவியுயர்வுகள் பெற்று சமூக சேவையில் ஈடுபட்டு வளமான வாழ்வு வாழ எமது பாடசாலைச் சமூகம் சார்பில் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

மதிப்பிற்குரிய சிறப்பு விருந்தினர் அவர்களே! கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட நீங்கள் ஆரம்பக் கல்வியை எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையான யா/கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலையில் கற்றுள்ளீர்கள். தொடர்ந்து தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரை யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் கற்றீர்கள். பின்னர் உங்கள் கல்வித் தேர்ச்சி காரணமாக 1972 ஆம் ஆண்டு அரச எழுதுநராக இணைந்து சிறந்த சேவையாற்றியுள்ளீர்கள். தொடர்ந்த முகாமைத்துவ உதவியாளர் தரம் 1க்கு பதவி உயர்வு ெற்று சிறந்த சேவை செய்த நீங்கள் யாழ் மாவட்ட கமநல திணைக்களத்தில் பதவி நிலை உத்தியோகத்தர் பதவி வகித்தீர்கள்.

உங்களது சேவை முதிர்ச்சி காரணமாக உடுவில் உப அரச அதிபர் அலுவலகத்தில் எழுதுவினைஞராகவும், தொழில் திணைக்களம் ஹற்றன், தொழில் திணைக்களம் வவுனியா, கமநல அபிவிருத்தி திணைக்களம் யாழ் மாவட்டம் போன்றவற்றில் பதவிநிலை உத்தியோகத்தராகக் கடமையாற்றிய நீங்கள் தற்போது அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் எமது பாடசாலையின் பழைய மாணவராவீர்கள். நீங்கள் மணம்முடித்து புகுந்த வீடு சென்றாலும் எமது பாடசாலையின் கல்வி அபிவிருத்தியில் அதிக அக்கறை கொண்டவர்கள். நீங்கள் எமது பாடசாலைக்கு சென்ற வருடம் இரண்டு புத்தக றாக்கைகளை அன்பளிப்பு செய்துள்ளீர்கள். இதனை எமது பாடசாலைச் சமூகம் என்றும் நினைவில் வைத்திருக்கும். தொடர்ந்து நீங்கள் பொது நல சேவையில் ஈடுபட்டு சீரும் சிறப்புடனும் வாழ இறைவனின் துணை வேண்டுவதுடன் சிறப்பு விருந்தினராக இவ்விழாவிற்கு வந்து சிறப்பித்தமை எமக்கு பெருமை தருகின்றது.

***வாழ்க! சீரும் சிறப்புடனும் வாழ்க!***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது பாடசாலையின் ஆசிரிய ஆளணியினர் விபரம் – 2018

## STAFF DETAILS - 2018

| Full name | Subject Service | |
|---|---|---|
| Mr.Kumarasamy Ahilan | Primary | SLPS 3 |
| Mrs.Kirupahari Ellangovan | Primary General | SLTS 1 |
| Mrs.Uthayareka Anuraj | Primary General | SLTS 2-1 |
| Mrs.Kohilavany Naguleswaran | Primary General | SLTS 2-1 |
| Mrs. Yasothamalar Sivathasan | Primary General | SLTS 2-1 |
| Mr.Gnanapiragasam Justinmary | General English | SLTS 1 |
| Mrs.Elilarasy Gangasivam | Primary General | SLTS 2-1 |
| Miss.Santhagowry Paramasamy | Primary General | SLTS 3-11 |

## எமது பாடசாலையின் மாணவர் விபரம் – 2018

| வகுப்பு | ஆண் | பெண் | தொகை |
|---|---|---|---|
| தரம் 1 | 06 | 04 | 10 |
| தரம் 2 | 04 | 05 | 09 |
| தரம் 3 | 06 | 03 | 09 |
| தரம் 4 | 01 | 02 | 03 |
| தரம் 5 | 09 | 06 | 15 |
| மொத்த மாணவர்கள் | 26 | 20 | 46 |

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

எமது பாடசாலையின் அபிவிருத்தியில் பாடசாலையின் அபிவிருத்திச் சங்கம் சிறந்த பங்களிப்பை ஆற்றி வருவதோடு பழைய மாணவர், பெற்றோரின் ஈடுபாடும் சிறப்பானதாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்திக் குழு

இது எமது பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், வலயப்பிரதிநிதி போன்றோரை உள்ளடக்கி இருப்பதோடு எமது அனைத்து செயற்பாடுகளையும் சீர்தூக்கி அலசி ஆராய்ந்து முன்மொழிவுகளை வழங்கி சிறப்பாக செயற்பட்டு வருகின்றது. இதில் பின்வருவோர் உள்ளடங்குகின்றனர்.

## பாடசாலை அபிவிருத்திக் குழு

**தலைவர்** : திரு.கு.அகிலன் (அதிபர்)

**செயலாளர்** : திருமதி.க.குணேஸ்வரி (பெற்றோர்)

**பொருளாளர்** : திருமதி.கி.இளங்கோவன் (ஆசிரியர்)

**உறுப்பினர்கள்** : திருமதி.எ.கங்காசிவம் (ஆசிரியர்)

திருமதி.உ.அனுராஜ் (ஆசிரியர்)

திரு.அ.வன்னியசிங்கம் (பெற்றோர்)

திருமதி.ப.பரமேஸ்வரன் (பெற்றோர்)

திருமதி.சு.அன்னலட்சுமி (பழைய மாணவர்)

திருமதி.ஜெ.கலைச்செல்வி (பழைய மாணவர்)

**வலயப் பிரதிநிதி** : திரு.F.X.அன்ரன்
(கோட்டக்கல்வி அதிகாரி, நல்லூர்)

## எமது பாடசாலை நிர்வாக செயற்பாட்டுடன் தொடர்புபட்டுள்ள ஏனைய குழுக்கள் வருமாறு

- முகாமைத்துவக் குழு
- பெறுகைக் குழு
- தொழில் நுட்ப மதிப்பீட்டுக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாடசாலையில் இயங்கும் மன்றங்கள்

## தமிழ் மன்றம்

பொறுப்பாசிரியர் : திருமதி.ய.சிவதாசன்

இவர் தவணைக்கு இரண்டு தடவை மன்றச்செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறார். தமிழ்த்தின விழாக்கள், வாசிப்பு மாதம், பிரதேச செயலக கலாசார தமிழ் நிகழ்வுகளிலும் மாணவர்களை தயார்படுத்தி சிறப்பாக செயற்பட்டு வருகிறார். மன்றத்தின் செயற்பாடுகள் மாணவர் திறனை வளப்படுத்துகின்றன.

## செயற்பட்டு மகிழ்வோம்

பொறுப்பாசிரியர் : திருமதி.உதயரேகா அனுராஜ்

மாணவர்களிடையே உடல் உளரீதியான சமநிலை காணப்படும் போதே கற்றல் சிறப்படையும். அந்த வகையில் செயற்பட்டு மகிழ்வோம் மூலமாக காலைச் செயற்பாடுகள் சிறப்பாக ஆரம்பமாகிறது. கோட்டமட்ட ரீதியில் நடைபெற்ற இந்த செயற்பாட்டில் மாணவர்கள் குறித்த ஆசிரியரால் தயார்படுத்தப்பட்டு சிறப்பாக செயற்பட்டது. இதனை வலுப்படுத்தும் நடவடிக்கையாக "**Activity Kids**" செயற்பாடு தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது.

## நூலக பொறுப்பு

பொறுப்பாசிரியர் : செல்வி பரமசாமி சாந்தகௌரி

எம்மிடம் உள்ள சிறிய நூலக புத்தகங்களை ஒழுங்குபடுத்தி மாணவர் வாசிப்பு ஆற்றலை ஊக்குவிக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றார்.

## ஆங்கில மன்றம்

பொறுப்பாசிரியர் - திரு.ஞானப்பிரகாசம் ஜஸ்ரின்மேரி

இன்று சர்வதேச ரீதியாக ஆங்கிலக்கல்வி முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. இதன் தாக்கத்தை அன்றாட வாழ்விலே நாம் பெரிதும் உணர்கிறோம். அந்த வகையில் வாய்மொழி ஆங்கிலத்தையும் ஆங்கில மொழித்திறனையும் தரம் 1 - 5 வரை செப்பனிடுவது அவசியம். இதனை குறித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடஆசிரியர் செய்து வரும் அதேவேளை மும்மொழித் திட்டம் **(Trilingual Programme)** தொடர்பான வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. தவணைக்கு இரண்டு பரீட்சைகள் வைத்து மாணவர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்.

## மேலைத்தேய வாத்தியக்குழு

பொறுப்பாசிரியர் - திருமதி.கிருபாஹரி இளங்கோவன்

பாடசாலையில் இடம் பெறுகின்ற சகல விழாக்களிலும் விருந்தினர் அழைத்துவரப்படும் போது இக்குழு தனது பங்களிப்பை செய்து விழாவினை சிறப்பிக்கின்றது. இக்குழுவை மேலும் நவீனப்படுத்துவது அவசியமாகிறது.

## பாடசாலை போசாக்கு நிகழ்ச்சித் திட்டம்

பொறுப்பாசிரியர் - திருமதி.நகுலேஸ்வரன் கோகிலவாணி

இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் உணவு மிகவும் தரமாகவும் சுவையாகவும் வழங்கப்படுகின்றது. இதனை பொறுப்பாசிரியர் நன்கு கண்காணித்து நெறிப்படுத்தி வருகின்றார். இவ்வுணவு சமைப்பதற்காக பழைய மாணவரின் பெற்றோர் திருமதி.வி.வாசுகி ஈடுபடுத்தப்பட்டுள்ளார். மாணவர்கள் இருவரின் பெற்றோர் அங்கத்தவராக இருந்து கண்காணித்து வருகின்றனர். அ.வன்னியசிங்கம், பழைய மாணவி திருமதி.அன்னலட்சுமி போன்றோரும் இக் குழுவில் இடம்பெறுவதுடன் பொதுநல சுகாதார உத்தியோகத்தர் திரு.S.சிவானுஜனின் மேற்பார்வையும் சிறப்புக்குரியதுடன் பாடசாலை அதிபரின் கண்காணிப்பும் ஆலோசனையும் மேலும் இத் திட்டத்தை வலுப்படுத்துகின்றது.

## மாணவ முதல்வர் குழு

பொறுப்பாசிரியர் - திருமதி.கிருபாஹரி இளங்கோவன்

மாணவரது தலைமைத்துவ ஆற்றலை வளர்க்கும் நோக்கிலும் பாடசாலையின் உன்னதமான செயற்பாட்டிற்கும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மாணவர்கள் தாமாக உணர்ந்து தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்று கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் - 2018



சண்முகரத்தினம் கிஷாந்தினி
184 புள்ளிகள்
மாவட்ட நிலை - 108



ஜெகதீசன் யுவேதிகா
169 புள்ளிகள்
மாவட்ட நிலை - 806



சிவரூபன் கோபிநாத்
166 புள்ளிகள்
மாவட்ட நிலை - 1008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரவுக்குழு, ஒழுக்காற்றுக்குழு

பொறுப்பாசிரியர் – திருமதி.கிருபாஹரி இளங்கோவன்

இதன் பொறுப்பாசிரியர் மாணவரது வரவு, தொடர்பிலும் ஒழுக்காற்று நடவடிக்கையிலும் காத்திரமான செயற்பாடுகளை முன்னேடுத்து சிறப்பாக செயற்படுகிறார். இது பாடசாலையின் இயங்கு நிலையை ஒழுங்குபடுத்துகிறது எனலாம்.

## பாடசாலை விழாக்குழு

பொறுப்பாசிரியர் – திருமதி.எழிலரசி கங்காசிவம்

பாடசாலையின் வெளியீடுகள் பரீட்சைப் பெறுபேறுகளாலும், இணைபாட விதான செயற்பாடுகள் மற்றும் விழாக்கள் மூலமாகவே வெளிக்கொணரப் படுகின்றன. அந்த வகையில் குறித்த ஆசிரியரின் நெறிப்படுத்தலில் பாடசாலையின் கால்கோள் விழா, வாணிவிழா என்பன சிறப்பாக செயற்படுத்தப்படுகின்றன.

## சுற்றாடல் மன்றம்

பொறுப்பாசிரியர் – திருமதி.கோகிலவாணி நகுலேஸ்வரன்

சுற்றாடல் மன்றம் மூலம் சூழல் நேயம் பாதுகாக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது. சூழல் பாதுகாப்புக்காகவும் நோயெதிர்ப்பு பாதுகாப்பு திட்டமாகவும் மாதமொருமுறை இம்மன்றம் பாடசாலைச் சூழலை சுத்தம் செய்து அழகுபடுத்தும் செயற்பாட்டில் ஈடுபடுகின்றது.

## இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர் :

திருமதி. அன்பரசி நல்லைக்குமரன்

## புதிதாக எம்முடன் இணைந்த ஆசிரியர் :

செல்வி.பரமசாமி சாந்தகௌரி (ஆரம்பக் கல்வி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசில் பெறுவோர் விபரம் - 2018

**தரம் – 1**

01. க.கஜானன் - கணிப்பீடு - தமிழ்
02. சு.லுகாஸ் - தமிழ், கணிதம், கோலம் போடுதல் - 2ம் இடம்
03. தி.அபிஷாந்த் - சுற்றாடல் மன்றம்
04. த.பானுஜன் - மாலை கோர்த்தல் - 1ம் இடம்
05. உ.ஜதீஸன் - தமிழ்மன்றம்
06. சி.ப்ரணிதன் - சுற்றாடல் மன்றம்
07. அ.அடோனாஜொய்ஸி - கணிப்பீடு தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம்
08. ற.சார்மியா - கணிப்பீடு கணிதம்
09. ஞா.வைஷாளினி - கணிதம்
10. சி.நிஷானிகா - தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல்

**தரம் – 2**

01. ந.கீர்த்திகன் - பொதுத்தேர்ச்சி
02. ரா.சரண் - பொதுத்தேர்ச்சி
03. உ.ஜபிஷன் - பொதுத்தேர்ச்சி
04. த.ஜாதவன் - பொதுத்தேர்ச்சி, மாலை கட்டுதல் - 2ம் இடம்
05. க.தர்ஷிகா - பொதுத்தேர்ச்சி, மாலை கட்டுதல் - 1ம் இடம்
06. வி.அபினா - பொதுத்தேர்ச்சி
07. கு.நேருஜா - பொதுத்தேர்ச்சி, மாலை கட்டுதல் - 3ம் இடம்
08. ஜெ.செசிலிள - பொதுத்தேர்ச்சி, மாலை கட்டுதல் - 3ம் இடம்

**தரம் – 3**

01. பி.விஷால் - பொதுத்தேர்ச்சி,
    நவராத்திரி விழா மாலை கோர்த்தல் போட்டி
    - 3ம் இடம்
02. அ.அபிசாந் - பொதுத்தேர்ச்சி
03. உ.சிவகஜன் - பொதுத்தேர்ச்சி
04. வி.லாஷிம் - தமிழ், கணிதம், சுற்றாடல், வாசிப்பு, சமயம்
05. றெ.றினுஸ்சன் - பொதுத்தேர்ச்சி, ஆங்கிலம்
06. ர.ஷஜிந்தன் - வரவு ஒழுங்கு
07. ர.அக்ஷயா - கணிதம், சுற்றாடல், ஆங்கிலம்
    சகலகலாவல்லிமாலை மனனப்போட்டி - 1ம் இடம்
08. சி.உமாசாருகா - தமிழ், கணிதம்
09. அ.அனுஸ்கா - ஆங்கிலம், வாசிப்பு, கிறிஸ்தவம்,
    சகலகலாவல்லிமாலை மனனப் போட்டி - 1ம்இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 4

01. வி.சிமோணா - தமிழ், கணிதம், ஆங்கிலம், வாசிப்பு
சகலகலாவல்லி மாலை மனனப் போட்டி - 1ம் இடம்

02. ம.செரினா - சமயம், தமிழ், அங்கிலம்

03. கு.பௌஷி - சுற்றாடல் மன்றம்
சகலகலாவல்லி மாலை மனனப் போட்டி - 2ம் இடம்

## தரம் - 5

01. அ.அருஞ்யன் - R.C, ஆங்கிலம், கோலம் போடுதல் - 2ம் இடம்

02. ரா.கிசோன் - ஆங்கிலம், சுற்றாடல்

03. வி.லவர்ணன் - சுற்றாடல் மன்றம், தோரணம் கட்டுதல் - 3ம் இடம்

04. சி.கோபிநாத் - கணிதம், சுற்றாடல், ஆங்கிலம்,
கோலம் போடுதல் - 1ம் இடம்

05. கு.கிலஸ்ரிகன் - N.R.C

06. க.விபூஷணன் - சுற்றாடல் மன்றம்

07. வி.விபூஜன் - சுற்றாடல் மன்றம்

08. சி.பிரித்திபிராஜ் - சமயம், சுற்றாடல்

09. ரா.ஜயந்தன் - சுற்றாடல் மன்றம், தோரணம் கட்டுதல் - 2ம் இடம்

10. ச.கார்த்திகா - சுற்றாடல் மன்றம்

11. ப.வர்சனா - சுற்றாடல் மன்றம்

12. கா.தீபிகா - தோரணம் கட்டுதல் - 1ம் இடம்

13. ஜெ.சஸ்வினி - சுற்றாடல் மன்றம்

14. ச.கிஷாந்தினி - கணிதம், துரித கணிதம், ஆங்கிலம்
கோலம் பேடுதல் - 3ம் இடம்

15. ஜெ.யுவேதிகா - ஆங்கிலம், சமயம், தமிழ்
கோலம் போடுதல் - 3ம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2018ல் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களும் பெற்ற புள்ளிகளும்

| | மாணவர் பெயர் | பெற்றபுள்ளிகள் | மா.நிலை |
|---|---|---|---|
| 01. | சண்முகரத்தினம் கிஷாந்தினி | 184 | 108 |
| 02. | ஜெகதீசன் யுவேதிகா | 169 | 806 |
| 03. | சிவரூபன் கோபிநாத் | 166 | 1008 |
| 04. | ராஜன் கிசோன் | 146 | |
| 05. | சிறிதரன் பிரித்திவ்ராஜ் | 142 | |
| 06. | அமலதாஸ் அருஞ்யன் | 141 | |
| 07. | ராகவன் யஜந்தன் | 135 | |
| 08. | பரமேஸ்வரன் வர்சனா | 128 | |
| 09. | விமல்ராஜ் விபூஜன் | 123 | |
| 10. | ஜெயராசா சஸ்வினி | 95 | |
| 11. | குகேந்திரன் கிலஸ்ரிகன் | 75 | |
| 12. | காந்தரூபன் தீபிகா | 72 | |
| 13. | விக்னேஸ்வரன் லவர்ணன் | 65 | |
| 14. | கதிர்காமநேசன் விபூஷணன் | 47 | |
| 15. | சத்தியஜீவன் கார்த்திகா | 40 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலையில் காணப்படும் தற்போதைய தேவைகள்

01. நூலகம் (சிறிய அடைக்கப்பட்ட அறை கொண்டது)
02. அலுவலக பயன்பாட்டிற்கான கணனி - 1
03. மைதான வசதி
04. சுகாதார தொழிலாளி
05. மடிக்கணனி
06. மல்ரி மீடியா

## இவ்வருடம் (2018) பாடசாலை நலன்கருதி அன்பளிப்பு செய்தோர்

- மின் விசிறி - 01
  தரம் 5 மாணவனின் பெற்றோர் திரு.ராகவன்
- ரியூப்லைற் - 01 (LED) இரவு நேர பயிற்சி வகுப்புக்காக தரம் 5 மாணவனின் பெற்றோர் திரு.சிவரூபன்
- கரும்பலகை - 03 (மூன்று)
  ரூபா 10000/= பெறுமதிக்கு உட்பட்டது. தையல்நாயகி நிதியம்
- நீர் சுத்திகரிப்பு இயந்திரம் - 02
  ரூபா 66000 க்கு உட்பட்டது. திரு.கந்தசாமி விஜய் (பழைய மாணவர்) தற்போது கனடா நாட்டில் உள்ளார்.
- தரம் 5 முன்னோடி வினாத்தாள்கள் தந்து உதவியமை
  வைத்திய கலாநிதி Dr.உமாசங்கர் குடும்பம்
- மாலதி முன்பள்ளி சனசமூக நிலையம்
  தரம் - 5 மாணவர்களிற்கான வெற்றித்தேர்வு வினாப் பத்திரங்கள் தந்து உதவியமை.
  இல்ல விளையாட்டுப் போட்டிக்கு உதவியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2018 பரிசில் தினம் இனிதே சிறப்பாக நடைபெற உதவிய அன்பு உள்ளங்கள்

- எமது பாடசாலை பழைய மாணவி திருமதி.ரதி சங்கரநாதன் 100 புள்ளிகளிற்கு மேல் பெற்றவர்களுக்கு புலமைப்பரிசில் கௌரவிப்பு மெடல் - 09 வழங்கி உதவியுள்ளார்.

- எமது பாடசாலை பழைய மாணவர்களின் பெற்றோர் திருமதி.விஜயரட்ணம் ராஜி புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்காக 03 தங்க மெடல்கள் தந்து உதவியுள்ளார்.

- எமது பாடசாலை பழைய மாணவி திருமதி.புனிதவதி கற்றல் உபகரணங்கள் பரிசுப் பொருட்களாக தந்து உதவியுள்ளார்.

- எமது பாடசாலை முன்னாள் ஆசிரியை திருமதி.பா.ஜெயக்குமார் புத்தகப்பைகள் பரிசுப் பொருளாக தந்து உதவியுள்ளார்.

- எமது பாடசாலை முன்னாள் ஆசிரியை செல்வி N.சந்திரிக்கா கற்றல் உபகரணம், புத்தகப்பை என்பவற்றை பரிசுப் பொருட்களாக தந்து உதவியுள்ளார்.

- தரம் 2 மாணவர்களின் பெற்றோர் மேடை அலங்காரம் செய்து உதவியுள்ளனர்.

- தரம் 5 மாணவர்களின் பெற்றோர்களான திரு.சண்முகரத்தினம் திருமதி.சிவரூபன், திருமதி.ஜெகதீசன் போன்றோர் விழாவிற்கான சிற்றுண்டி, தேநீர் செலவுகள் செய்து உதவியுள்ளனர்.

- கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தினர் பரிசுப் பொருட்கள் தந்து உதவியுள்ளனர்.

- ஏனைய மாணவர்களின் பெற்றோர் அறிக்கை தயாரித்தல், அழைப்பிதழ் தயாரித்தல் போன்றவற்றை செய்து தந்து விழா சிறப்பாக நடைபெற உதவியமை பெருமைக்குரிய விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

எமது பாடசாலையில் பரிசளிப்பு விழா சிறப்பாக நடைபெற அருள்பாலித்த இறைவனை முதலில் மனம் கொள்கிறோம்.

பிரதம விருந்தினராக வருகைதந்து விழாவை சிறப்பித்து மாணவர்களுக்கு பரிசில் வழங்கி கௌரவித்த திரு.தம்பிராசா சிவகுமார் உதவிக் கல்விப் பணிப்பாளர் அவர்களிற்கு எமது பாடசாலை சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்த பழைய மாணவர் திரு.வேலாயுதபிள்ளை அவர்களிற்கும் எமது பாடசாலை சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்விழாவிற்கான சிற்றுண்டிகள் தந்து உதவிய வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்ற மாணவர்களின் பெற்றோர்களுக்கு எமது நன்றிகள்.

மாணவர்களிற்கு பதக்கங்கள் (மெடல்) தந்து உதவிய திருமதி.ரதி சங்கரநாதன் குடும்பத்தினருக்கு எமது நன்றிகள்.

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களிற்கு 03 தங்க பதக்கங்களை தந்த உதவிய திருமதி.விஜயரட்ணம் ராஜி அவர்களிற்கும் எமது நன்றிகள்.

கற்றல் உபகரணங்கள் தந்து உதவிய பழைய மாணவி திருமதி.புனிதவதி, முன்னாள் ஆசிரியை திருமதி.பா.ஜெயக்குமார், எமது பாடசாலை முன்னால் ஆசிரியையும் ஆசிரிய ஆலோசகரும் ஆகிய செல்வி.N.சந்திரிக்கா அவர்களிற்கும் எமது பாடசாலை சார்ந்த நன்றிகள் பல.

மேடை அலங்காரம் சிறப்பாக செய்து விழா சிறக்க உதவிய தரம் 2 மாணவர்களின் பெற்றோர்களிற்கு எமது நன்றிகள்.

பரிசுப் பொருட்கள் தந்து உதவிய கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தினருக்கு எமது நன்றிகள் பல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகை மூலம் மாணவர்களை பாராட்டி காட்சிப் படம் (பனர்) செய்து உதவிய கொக்குவில் மேற்கு சனசமூக நிலையத்தினருக்கும், கொக்குவில் மக்கள் நம்பிக்கை நிதியத்தினருக்கும் எமது நன்றிகள்.

அழைப்பிதழ்கள் தயாரித்தல், அறிக்கை தயாரித்தல் போன்றவை சிறப்பாக வெளிவர உதவிய அனைத்து பெற்றோர்களிற்கும் எமது நன்றிகள்.

உபசரணை வழங்கி உதவிய அனைவருக்கும் எமது நன்றிகள்.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து எமது பாடசாலையின் முகவரியை பிறர் அறிய உதவிய தரம்-5 மாணவர்களிற்கும் வகுப்பாசிரியருக்கும் எமது நன்றிகள்.

கலை நிகழ்வுகள் நிகழ்த்தி விழா சிறக்க உதவிய மாணவச் செல்வங்களிற்கும் எமது நன்றிகள்.

கலை நிகழ்வுகளைப் பயிற்றுவித்த எமது அன்புக்குரிய ஆசிரியர்களிற்கு எமது நன்றிகள்.

இவ்விழா இவ்வளவு சிறப்பாக நடைபெற உதவிய அனைத்து ஆசிரிய அன்புள்ளங்களுக்கும் எமது நன்றிகள்.

இவ் அறிக்கைப் புத்தகத்தை சிறப்பாக வடிவமைத்து தந்த சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ் அச்சகத்தாருக்கும் எமது நன்றிகள்.

இந்நிகழ்வுகளை மீண்டும் மீட்டிப் பார்க்க உதவிய புதிய பகலவன் படப்பிடிப்பாளருக்கும் எமது நன்றிகள்.

மங்களவாத்தியம் இசைத்த கலைஞர்களுக்கும் இதற்கு அனுசரணை வழங்கிய சிறப்புவிருந்தினர் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

இப் பரிசளிப்பு விழா சிறப்பாக நடைபெற பொருளாதார ரீதியிலும், சரீர ரீதியாகவும் அர்ப்பணிப்புடன் உதவிய அனைத்து பெற்றோர்களிற்கும் எமது நன்றிகள்.

**திரு.கு.அகிலன்**
**பாடசாலை அதிபர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

J/Kokuvil West C.C.T.M.S

முயற்சி திருவினை ஆக்கும்

இராகம்: ஹம்சத்வனி        தாளம்: ஆதி

வாழியவே வாழியவே வாழிய
வாழிய வாழியவே
கொக்குவில் மேற்கு சி.சி.தமிழ்க்
கலவன் பாடசாலை வாழியவே (வாழியவே)!

அறிவியல் கலையுடன் அழகியற்கலைகள்
அற்புதமாய் அளிக்கும் பாடசாலை
ஆரம்பக் கல்வியை ஆண்டொன்று முதலாய்
ஆர்வமாய் ஊட்டிடும் பாடசாலை (வாழியவே)!

செந்தமிழ் அதனோ டாங்கில மொழியை
பைந்தமிழ் சிறுவர்கள் பயிலுமிடம்
நந்தமிழ் கலைகளை நாளுமே கற்று நாம்
நன்மை யடைந்திட வாழியவே (வாழியவே)!

கற்றவர் உற்றவர் மற்றவர் போற்ற
கருத்துடன் ஓங்கியே வாழியவே
பற்றுடன் பாலர்கள் பயின்றுமே என்றும்
பாரினில் சிறந்திட வாழியவே (வாழியவே)!

சிவரஞ்சனம். 077 3068982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org